# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 ஜனவரி மாதம் 05 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ சலோசன கமகே உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2015.10.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:**

**(Îæ/vi (1)15/40)**

அ. கிராமிய வங்கிகளில் காணப்படும் தங்க நகைகளை ஏலத்தில் இடும் போது எத் தாபனம், முகவர் தாபனமாக செயற்படுகிறது ?

ஆ. கிராமிய வங்கி மற்றும் முகவர் தாபனத்திற்கு இடையே காணப்படும் பிணைப்பு மற்றும் பொறுப்பு யாது ? (ஏலம் ஒன்று எழும் சந்தர்ப்பத்தில்)

இ. அதற்காக அதிகாரத்தில் காணப்படும் சட்டங்கள் யாவை ?

ஈ. தங்க நகைகள் ஏலத்திற்கு இடப்பட்ட பின்னர் அதன் இறுதி தீர்மான அதிகாரம் யாரிடம் உள்ளது ?

**02.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/76)**

அ. 2012, 2013, 2014 ஆகிய வருடங்களில் மேல் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள பௌத்த, இந்து, முஸ்லீம் அறநெறிப் பாடசாலைகள் எத்தனை காணப்படுகின்றன ?

ஆ. அந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக எவ்வளவு நிதி அந்தந்த வருடங்களில் வழங்கப்பட்டுள்ளன ?

இ. அந் நிதி ஏற்பாடு எந்த நிதியத்தில் இருந்து வழங்கப்பட்டது ?

ஈ. அந்த நிதி வழங்கப்படாத அறநெறிப் பாடசாலைகள் காணப்படுகின்றனவா ?

உ. என்ன காரணத்தினால் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை ? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அது எந்த நடைமுறைக்கு இணங்க ?

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **சபை நடவடிக்கை**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2015.12.18 மற்றும் 2015.12.23 ஆகிய தினங்களில் நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் இணக்கத்தின் படி இன்றைய தினம் (2016.01.05) நிகழ்ச்சி நிரலில்

குறிப்பிடப்பட்டுள்ள பொது நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகள் விதி இல 15(4), 63(அ)(2) மற்றும் 63(அ)(3) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளில் இருந்து விடுவித்துச் செயற்படுத்தப்படல் வேண்டும்."

## X. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

பிரேரணை :

***<u>இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்</u>***
***<u>தகவல்களை அறியும் உரிமை தொடர்பான சட்டமூலம்</u>***

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் - <u>தகவல்களை அறியும் உரிமை தொடர்பான சட்டமூலம்,</u> மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் 154(எ) உறுப்புரையின் கீழ் (3) ஆவது உப உறுப்புரையின் கீழ் இந்த மாகாண சபையின் கருத்தினை மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கு அறிவிப்பதற்கு ஏற்ற முறையில் 12 நாட்களுக்குள் பெற்றுக் கொடுக்குமாறு 2015.12.16 ஆந் திகதி கடிதத்தின் மூலம் மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2015.12.22 ஆந் திகதி சபைக் கூட்டத்தில் அந்த சட்டமூல நகல் பிரதி தொடர்பாக கலந்துரையாடக் கூடிய வேளையில் சட்ட மூலத்தில் காணப்படும் கடினத் தன்மையின் காரணமாக அது தொடர்பாக விரிவாக அறிந்து கலந்துரையாடுவதற்கு உரிய தேவை தோன்றியுள்ள படியாலும், தற்போது கிடைக்கப்பெற்றுள்ள கால எல்லை போதுமானதில்லை ஆகையால் அதற்காக போதிய அளவு நேரத்தினைப் பெற்றுக் கொடுக்குமாறு கௌரவ ஆளுநரிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என இந்த மாகாண சபை அன்றைய தினம் கூட்டாக தெரிவித்த கருத்திற்கு இணங்க போதியளவு நேரத்தினை தற்போது கேட்டுள்ளதுடன் 2015.12.23 ஆந் திகதி சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவில் இணக்கத்தினை தெரிவித்த படி இன்று (2016.01.05) இந்த சபையினால் அந்த <u>தகவல்களை அறியும் உரிமை தொடர்பான சட்டமூலம்,</u> தொடர்பாக கலந்துரையாடி வரும் முடிவிற்கு இணங்க அக் கருத்தினை மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு அறிவிப்பதற்காக கௌரவ ஆளுநருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த மாகாண சபை கருதுகின்றது.

*[உரிய ஆவணப் பிரதிகள் கௌரவ உறுப்பினர்களுக்கு 2015.12.21 மற்றும் 22 ஆகிய தினங்களில் சபைக் கூட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன]*

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

[

**01. கௌரவ இந்திக பண்டார அவர்கள்**

மேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் பாதுகாப்பு படையினருக்கான பல கிராமங்கள் அமைந்துள்ளதுடன் இக் கிராமங்களில் 30 வருட காலமாக எங்கள் நாட்டில் காணப்பட்ட யுத்தத்தில் எங்களது நாட்டை மீட்டெடுப்பதற்காக தமது உயிர்களை தியாகம் செய்து யுத்தத்தினால் அங்கவீனர்களாக்கப்பட்ட பாதுகாப்புப் படையினரும் அவர்களின் பெற்றோரும் மனைவிமார்களும் பிள்ளைகளும் வகிக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் எல்லா அரசியல் கட்சியினதும் அங்கத்தவர்கள் பாதுகாப்பு படையினரின் கிராமங்களுக்குச் சென்று வாக்குகளைப் பெற்ற போதும், அந்த கிராமங்களில் வசிப்பவர்களுக்கு போக்குவரத்து, சுகாதார, கல்வி, குடிநீர் வசதிகள் இல்லாமையால் பல சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். எங்களது நாட்டிற்காக மிகப்பெரிய தியாகத்தைச் செய்து பாதுகாப்பு படையினருக்கான கிராமங்களில் வகிக்கும் மக்களின் மேற்கூறிய தேவைகள் உள்ளிட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து அதற்கான தீர்வு ஒன்றாக பாதுகாப்பு படையினருக்கான கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஒழுங்கான முறை ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)14/13)**

**02. கௌரவ மஹேஷ் அல்மேதா அவர்கள்**

மேல் மாகாணத்தில் தோட்டம் உள்ளடங்கலாக பெருமளவு மக்கள் வசிப்பதுடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சிறந்ததாகவும், அவர்கள் இந் நாட்டின் பொருளாதாரத்தின் பலமிக்க பங்குதாரர்களாக மாற்றும் நோக்கிலும் பெருமளவு தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை ஒழுங்கான முறையில் பெற்றுக் கொடுக்க பல வசதிகள் ஏற்படுத்தப்பட்ட போதும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்கு காணப்படும் பிரச்சினைகளில் பாடசாலைக்கு செல்வதில் காணப்படும் போக்குவரத்துப் பிரச்சினை முக்கியமானதாக காணப்படுவதுடன் அதற்குத் தீர்வு ஒன்றாக மேல் மாகாணத்தினுள் கடமையாற்றும் எல்லாத் தோட்டப் பாடசாலைகளிலும் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக மேல்மாகாண மாகாண சபையின் மத்தியஸ்தத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது சிறந்தது என இந்த சபை கருதுகின்றது. **(பி/vi (1)14/14)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.12.23 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.